www.Padasalai.Net

**சுருக்கம்**

தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணி - பள்ளிக் கல்வி இயக்குநர்/அரசுத் தேர்வுகள் இயக்குநர் மற்றும் அதனையொத்த பணியிடங்கள் - பணியிட மாறுதல் மற்றும் இணை இயக்குநர் பணியிடத்திலிருந்து இயக்குநராக பதவி உயர்வு அளித்து பணி நியமனம் - ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வி (பக 1(1)) துறை**

**அரசாணை (நிலை) எண்.173**

**நாள் 15.07.2024.**
**திருவள்ளுவராண்டு- 2055**
**குரோதி, ஆனி-31**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.130, பக(பக1(1)) துறை, நாள் 10.06.2024.
2. அரசாணை (நிலை) எண்.172, பக(பக1(1)) துறை, நாள் 15.07.2024.

-------------

**ஆணை**:-

தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியில் வகுப்பு Iஇன் கீழுள்ள இயக்குநர் மற்றும் அதனையொத்த பணியிடங்களில் பணிபுரியும் கீழே குறிப்பிட்டுள்ள அலுவலர்களுக்கு நிர்வாக நலன் கருதி அவர்களது பெயர்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு மாறுதல்கள் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

| வ. எண். | அலுவலரின் பெயர் மற்றும் தற்போது பணிபுரியும் பணியிடம் திரு. / திருமதி. | மாறுதல் அளிக்கப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1. | ந.லதா,<br>இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6. | இயக்குநர்,<br>அரசு தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை-6 |
| 2. | டி.உமா,<br>உறுப்பினர்(TET)<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை-6. | இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை-6. |
| 3. | எஸ்.சேதுராமவர்மா,<br>தொடக்கக் கல்வி இயக்குநர்,<br>சென்னை 6 | உறுப்பினர்(TET)<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை 6. |

www.Padasalai.Net



2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியில் வகுப்பு Iஇன் கீழுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர்/அரசுத் தேர்வுகள் இயக்குநர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கான 2024-ஆம் ஆண்டிற்கான காலிப்பணியிட மதிப்பீடு 3 (மூன்று) என நிர்ணயம் செய்தும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியில் வகுப்பு Iஇன் கீழுள்ள பள்ளிக் கல்வி இயக்குநர்/அரசுத் தேர்வுகள் இயக்குநர் மற்றும் அதனையொத்த பணியிடங்களுக்கான 2024-ஆம் ஆண்டிற்கான முறையான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியில் வகுப்பு IIஇன் கீழுள்ள இணை இயக்குநர் மற்றும் அதனையொத்த பணியிடத்தில் பணிபுரியும் முனைவர்பூ.ஆ.நரேஷ், இணை இயக்குநர் (இடைநிலை), அரசு தேர்வுகள் இயக்ககம் அவர்களுக்கு தமிழ்நாடு பள்ளிக் கல்விப் பணியில் வகுப்பு Iஐச் சார்ந்த இயக்குநர் மற்றும் அதனையொத்த பணியிடத்திற்கு பதவி உயர்வு அளித்து, மேலே பத்தி 1ல் அளிக்கப்படும் மாறுதலினால் காலி ஏற்படும் தொடக்கக் கல்வி இயக்குநர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஜெ.குமரகுருபரன்,**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.
(பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை 6.
பள்ளிக் கல்வி துறையின் அனைத்து துறை தலைவர்கள். சென்னை - 6/2.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
கருவூலம் மற்றும் கணக்கு ஆணையர், சென்னை- 35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9/35.
**நகல்**
பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து அலுவலர்கள்/ பிரிவுகள், சென்னை-9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/7/24
பிரிவு அலுவலர்.